செ.வெ.எண்:10 நாள்:05.04.2017

# பத்திரிக்கைச்செய்தி

கரூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவது தொடர்பாக பண மோசடி நபர்கள் சிலர் புதுவாழ்வு மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் பெயரை பயன்படுத்தியும் மற்றும் தங்களை அரசு சார்பு நிறுவனம் அல்லது தொண்டு நிறுவனம் என்று கூறிக் கொண்டும் தனிநபர்கள் அல்லது மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கல்வி, வீடு, நிலம், வாகனம் வாங்க குறைந்த வட்டியில் மான்யத்துடன் கடன் தருகிறோம் என்று தினசரி பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்து வருகின்றனர். விளம்பரம் பார்த்து தொடர்பு கொள்ளும் நபர்களிடம் கடன் பெறவேண்டுமானால் தங்களின் வங்கி கணக்கில் முன்பணம் செலுத்துமாறும், முன் பணம் செலுத்திய பின்னரே கடன் பரிசீலனை செய்யப்படும் என கூறி முன்பணம் பெற்றுக்கொண்டவுடன் அவர்களுடனான தொடர்பினை துண்டித்துக் கொண்டு கடன் தராமல் ஏமாற்றும் மோசடி வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே புதுவாழ்வுத்திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் பெயரினை பயன்படுத்தி மோசடியாக தினசரி பத்திரிக்கைகளில் வெளியிடப்படும் விளம்பரங்களை நம்பி பொதுமக்கள் யாரும் ஏமாறவேண்டாம், மோசடி நபர்களிடம் எக்காரணத்தைக் கொண்டும் தொடர்பு கொள்ள வேண்டாம். இதுபோன்ற நபர்களை இனம் காணும்போது உடனடியாக மாவட்ட நிர்வாகத்திடமோ அல்லது காவல்துறையிடமோ தகவல் தெரிவிக்குமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு,கோவிந்தராஜ்., இ.ஆ.ப., கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.